# සොබා

Soba / சொபா

පරිසර ප්‍රකාශනය



පරිසර අමාත්‍යාංශය

පරිසර අධ්‍යාපන පුහුණු ප්‍රවර්ධන හා විශේෂ ව්‍යාපෘති අංශය

2024

දෙවන කළාපය

XXXIII වෙළුම

CamScanner

# පටුන

පිටු අංකය


1. විද්‍යුත් සංචලනය ( E Mobility) ශ්‍රී ලංකාවේ ආර්ථික සංවර්ධනය සඳහා උත්ප්‍රේරකයක්. 7

2. තිරසර ප්‍රසම්පාදන සංකල්ප භාවිතය 14

3. **Enabling Digital Land Governance: Challenges and Solutions** 19

4. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு 23

5. **Sri Lanka's Contribution to Create a Balanced Approach to Economic Growth and Environmental Sustainability** 34

6. ස්වභාවික සම්පත් කළමනාකරණයේ සහ පාරිසරික ආර්ථික විද්‍යාවේ කාර්යභාර්ය 40

7. මනා ජල කළමනාකරණයක් සඳහා ජලය සම්බන්ධ ගිණුම් 45

8. පාරිසරික සංවේදී ප්‍රදේශ සංරක්ෂණයේ සමාජ - ආර්ථික ප්‍රතිලාභ 48

9. පරිසර සමතුලිතතාවය සඳහා හරිත සංකල්පයන්හි වැදගත්කම 55

10. රාජ්‍ය මූල්‍ය වත්කම්වල පරිභෝජන රටාවේ දී පාරිසරික දායකත්වය වටහා ගනිමු 57

11. **Embracing a Low-Carbon Economy for Sustainable Development** 62

12. நிலைபேண் விவசாயத்தின் பொருளாதார நன்மைகள் உலகளாவிய கண்ணோட்டம் 65

13. ස්වභාවික සම්පත් භාවිතය තුළින් සංවර්ධනය කරා යන ගමනේදී පාරිසරික සමතුලිතතාවය අභියෝගයට ලක්වීම හා ඒවා ජය ගැනීම. 72

14. තිරසර ජීවන පිළිවෙත් තුළින් දේශගුණික විපර්යාස අවම කිරීමට දායක වෙමු 75

15. **The Global Economy and Ecosystem Balance: A Delicate Interplay for Sustainable Growth** 82

16. යුතුකම් ඉටුකරමු 88

17. ජාතික හරිත වාර්තාකරණ ක්‍රමවේදය 89

18. **Environment and Humanity – (Safeguard Nature for a Brighter Future.)** 93

19. අනාගතය සොයා........ 96

20. ජීවයේ හුස්ම 100


CS CamScanner

**Fareena Ruzaik,**
Department of Geography, University of Colombo, Sri Lanka
**M.H. Fathima Nuskiya**
Department of Geography, South Eastern University of Sri Lanka

# அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு

## அறிமுகம்

சுற்றுசூழல் கவலைகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த போராட்டத்தினால் "நீலப்பொருளாதாரம்" என்ற சொல் உலகம் முழுதும் பரவி வருகின்றது. இது சுற்றுசூழல் சீரழிவு மற்றும் வளக் குறைப்பாட்டைச் சாமாளிக்க கடல் மற்றும் கடலோர பகுதிகளின் நிலையான பயன்பாட்டின் அடிப்படையில் ஒருங்கிணைந்த அணுகுமுறையை குறிக்கின்றது. இதனடிப்படையில், நிலைபேண் அபிவிருத்தியின் 14வது இலக்கை அடைந்து கொள்வதற்கு நீலப்பொருளாதாரம் தேவை என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகளால் அறிமுகப்படுத்தபட்டு 2012 ஆம் ஆண்டில் ரியோ+20 மூன்றாம் புவி உச்சி மாநாட்டிற்கு பிறகு நீலப்பொருளாதாரம் அதிக முக்கியத்துவம் பெற்றது. இந்நீலப்பொருளாதாரம் தொடர்பான தத்துவம் முதன்முதலில் 1994 இல் ஐக்கிய நாடுகள் பல்கலைகழத்தில் பேராசிரியர் குண்டர்பாலி அவர்களால் "கழிவும் உமிழ்வும் இல்லை" என்ற நிலையான மாதிரிகளை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு அறிமுகப்படுத்தபட்டது.

உலக வங்கியின் கூற்றுப்படி, நீலப் பொருளாதாரம் என்பது "பொருளாதார வளர்ச்சி, மேம்பட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் வேலைகளுக்கு கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துகின்ற அதேநேரத்தில் கடல் சுற்றுசூழல் அமைப்பின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பது ஆகும்." அந்தவகையில், கடல்சார் சுற்றுசூழல் அமைப்புக்களின் சிறந்த நிர்வாகம், குறைந்த உமிழ்வு, நியாயமான சுகாதார தரம் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடும் நீலப்பொருளாதாரமானது நிலையான மீன்பிடித்தல், கடல் ஆரோக்கியம், வனவிலங்குகள் பாதுகாப்பு மற்றும் மாசுப்பாட்டை நிறுத்துதல் போன்றவற்றை முக்கிய அம்சங்களாக கொண்டுள்ளது. இதன் நோக்கங்களாக வேலைகளை உருவாக்குதல், உணவு, சுத்தமான எரிசக்தி மற்றும் வாழ்வாதாரங்களை வழங்குதல், நிலையான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், காலநிலையை ஒழுங்குபடுத்த உதவுதல் ஆகியவை ஆகும். இந்நீலப்பொருளாதாரத்தின் மூலம் கடல் மற்றும் கடலோர பகுதிகளின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிசெய்ய வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகின்றது.

## நீலப்பொருளாதாரம் பற்றிய வரைவிலக்கணங்கள்

நீலப்பொருளாதாரம் தொடர்பாக பல நிறுவனங்களால் முன்வைக்கபட்ட கருத்துக்களாக,

- உலக வங்கி: பொருளாதார வளர்ச்சி, மேம்பட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் வேலைகள் ஆகியவற்றிற்காக கடல் வளங்களின் நிலையான பயன்பாடு ஆகும். அதே நேரத்தில் கடல் சுற்றுசூழல் அமைப்பின் ஆரோக்கியத்தையும் இது பாதுகாக்கின்றது.

- **ஐரோப்பிய ஆணையம் (European commission):** கடல்கள் மற்றும் கடற்கரைகள் தொடர்பான அனைத்து பொருளாதார நடவடிக்கைகள், பரந்த அளவில் நிறுவப்பட்டதும் ஒன்றோடு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதுமான வளர்ந்து வரும் துறைகளாகும்.

- **Conservation International:** நீலப்பொருளாதாரத்தில் "காபன் சேமிப்பு, கடலோர பாதுகாப்பு, கலாசார மதிப்புக்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கம் போன்ற சந்தைப்படுத்தபடாத பொருளாதார நன்மைகளும் அடங்கும்" எனக் கூறுகின்றது.

- **Commonwealth of Nation:** எங்கள் கடல் அல்லது நீல வளங்களை சிறப்பாக நடத்துவதை ஊக்குவிக்கும் ஒரு வளர்ந்துவரும் கருத்து என நீலப்பொருளாதாரம் தொடர்பாக கூறப்படுகின்றது.

### நீலப்பொருளாதாரம் என்ற உத்தியின் நான்கு பரிமாணங்கள்

1. கடல்களின் இயற்கைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்: இதில் மிக பிரதான சொத்து மீன்வளம் ஆகும்.
2. நமது கடலோர சூழலை மேம்படுத்தல்.
3. கடல்சார்ந்த பொருளாதார வாய்ப்புக்களை கைப்பற்றுதல்
4. கடல் உற்பத்தியை நிலையானதாக அதிகரித்தல்.

### நீலப்பொருளாதாரத்தின் அவசியம்

- கடல் வளங்களை சிறப்பாக பயன்படுத்தி நிலைபேண்தன்மையுடன் பேணி பாதுகாப்பதற்கு நீலப்பொருளாதாரம் உதவுகின்றது.
- மக்களால் பொருளாதார இலாப நோக்கத்திற்காக சுற்றுசூழல் மீது ஏற்படும் சீரழிவிலிருந்து கடல் வளத்தை நீலப்பொருளாதாரமானது பாதுகாக்கின்றது
- பொருளாதார வளர்ச்சியை தூண்டல், வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைத்தல் மற்றும் வளர்ந்துவரும் உலக மக்கள் தொகையின் உணவுதேவைகளை பூர்த்தி செய்தல் ஆகிய பல காரணங்களுக்காக நீலப்பொருளாதாரமானது தேவைப்படுகின்றது.

### நீலப்பொருளாதாரத்தினூடாக அடைந்துக்கொள்ளப்படுவது

- நிலைபேண் அபிவிருத்தியின் 14 ஆம் இலக்கினை அடைவதை பிரதான நோக்கமாக கொண்ட நீலப்பொருளாதாரத்தினை நடைமுறைப்படுத்துவதினூடாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கடல்கள் மற்றும் கடல் வளங்களை பாதுகாத்து நிலையான வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதினூடாக பின்வரும் உப நோக்கங்களை அடைந்துக்கொள்ள முடியும்.



CamScanner

| | |
|---|---|
| 14.1 | கடல் மாசுப்பாட்டை குறைத்தல். |
| 14.2 | சுற்றுச்சூழல் அமைப்புக்களைப் பாதுகாத்தல் மற்றும் மீள் அமைத்தல். |
| 14.3 | கடல் அமிலத்தன்மையை குறைத்தல். |
| 14.4 | நிலையான மீன்பிடி. |
| 14.5 | கடலோர மற்றும் கடல் பகுதிகளை பாதுகாத்தல். |
| 14.6 | அதிகபடியான மீன்பிடிப்புக்கு பங்களிக்கும் மானியங்களை முடிவுக்கு கொண்டு வருதல். |
| 14.7 | கடல் வளங்களின் நிலையான பயன்பாட்டிலிருந்து பொருளாதார நன்மைகளை அதிகரித்தல். |
| 14.8 | கடல் ஆரோக்கியத்திற்கான அறிவியல் அறிவு, ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்பத்தை அதிகரித்தல். |
| 14.9 | சிறியளவிலான மீனவர்களை ஆதரித்தல். |
| 14.10 | சர்வதேச கடல் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்படு-த்துதல். |

## அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு

நீலப்பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகிய இரண்டும் மிக நீண்ட காலமாக மூலோபாயத்தை உருவாக்கியுள்ளன. அந்தவகையில் இதன் பங்களிப்புக்களாக,

- ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கடலோரத்தை சுத்தம் செய்ய, EU Beach Cleanup பிரசாரத்தின் (செப்ரெம்பர் 21 - சர்வதேச கடற்கரை சுத்தப்படுத்தும் தினம்) மூலம் உள்ளூர் குடிமக்களை அழைத்து கடல் வளத்தினை பாதுகாக்கின்றனர். உதாரணமாக பாகுவில காஸ்பியன் தினத்திற்கு அர்ப்பணிப்புடன் கடற்கரையை சுத்தம் செய்யும் பிரசாரத்திற்காக ஐக்கிய நாடுகள் ஆதரவு அளித்தது.

- NY ஆனது UN தலைமையகத்தில் ஆன்லைன் (Online) நிகழ்வுகள், இசைநிகழ்ச்சிகள் மற்றும் புகைப்படப் போட்டிகள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதினூடாக நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் பங்களிக்கின்றது.

- ஒவ்வொரு வருடமும் சுமார் 8 மில்லியன் டன் நமது பெருங்கடலில் சேருகின்ற பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.



CamScanner

- இன்று மாறிவரும் கடல் சூழலை கண்காணிக்க தகவல் தொடர்பு தொழிநுட்பங்கள், தொலைநிலை கண்காணிப்பு, சென்சார் நெட்வார்க்குகள் மற்றும் RFID சில்லுகள் ஐக்கிய நாடுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ஐக்கிய நாடுகளின் UNEP எனும் திட்டமானது அதன் பிராந்திய கடல்களை பாதுகாக்கவும், கடலின் நிலையான பயன்பாட்டை மேம்படுத்தவும் உலகலாவிய செயல்திட்டத்தினை வழங்குகின்றது.

- ஐக்கிய நாடுகளின் UNESCO அமைப்பானது கடல் ஆராய்ச்சி கண்காணிப்பு அமைப்புக்கள், ஆபத்து குறைப்பு மற்றும் கடலோர பகுதிகளை நிர்வகித்தல் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக காலநிலை தணிப்பு, தொழிநுட்ப மற்றும் நிதி என்பவற்றை வழங்குக்கின்றது.

- சர்வதேச கடல்சார் சட்டத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) என்ற ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனமானது சட்ட சபை கட்டமைப்பை உருவாக்குகின்றது. Ex: கப்பல் போக்குவரத்தில் 1973 ஆம் ஆண்டில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைக்கும் சர்வதேச மாநாடு, 1954 ஆம் ஆண்டு எண்ணெய் மூலம் கடல் மாசுப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச மாநாடு ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியமை.

- ஐக்கிய நாடுகளின் IMO நிறுவனமானது காலநிலை மாற்றத்தை நிலையாக பேணக்கூடிய இலக்குகள், "Fit for 55" தொடர்பாக பசுமைக் கப்பல் போக்குவரத்தை துரிதப்படுத்தும் வகையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் முயற்சி பூண்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் நிறுவனமானது புதிய நீலப்பொருளாதாரத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத வகையில் நீல கார்பன் பிரித்தெடுத்தல், Bio technology, கடல் ஆற்றல் போன்ற துறைகளை உருவாக்கி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் முதலீடு செய்து வருகின்றது. உதாரணமாக பங்களாதேஸ், இந்தியா ஆகிய நாடுகளை கூறலாம்.

- ஐக்கிய நாடுகள் மற்றும் உலகிலுள்ள பிற அமைப்புக்களும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை தடுப்பதற்கான சிறந்த வேலை வாய்ப்பு, பொருளாதார நிதி, சிறந்த தொழிலாளர்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துகின்றன.

- சர்வதேச ரீதியில் இடம்பெறும் கடல் திருட்டு செயற்பாடுகளை கட்டுப்படுத்துதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக, சமீபத்தில் சோமாலியா மற்றும் கினியா வளைகுடாவில் கடற்கொள்ளையர்கள் அதிகரித்ததனால் UN மற்றும் IMO ஆகியவை கடற்கொள்கையை கையாள்வதற்கான கடல் மாநாட்டின் சட்டத்தில் உள்ள விதிகளை பூர்த்தி செய்ய கூடுதல் தீர்மானங்களை ஏற்றுக்கெண்டன.



CamScanner

- UNCLOS என்ற பெருங்கடல் தொடர்பான சட்டம் இயற்றி அதில் 1982 ஆம் ஆண்டு புவியில் பரந்த நீர் ஆதாரங்களுக்கு சர்வதேச சட்டம் வரையறுக்கப்பட்டதனூடாக பொருளாதார முன்னேற்றத்தையும் சூழல்செழிப்பையும் ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவி வருகின்றது.

- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் நீலப்பொருளாதாரம் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பது தொடர்பாக மாநாடுகளை வழங்குகின்றது. Ex: கென்யாவில் நடைபெற்ற Sustainable blue economy conference.

- வெற்றிகரமான உத்திகள், தகவல் அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்ள நாடுகளிடையே ஒப்பந்தங்களை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் முனைகின்றன.

- சுற்றுசூழலுக்கு இணக்கமான தொழில்களை உருவாக்குவதற்கும் இயக்குவதற்கும் புதிய தொழிநுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் பயன்படுவதை எளிதாக்க வளர்முக நாடுகளுக்கு உதவுகின்றது.

- பெருங்கடல்கள், ஏரிகள், கடல்கள் மற்றும் ஆறுகளை சுற்றி வாழும் சமூகங்களுக்கு நீலகார்பன், நீலப்பத்திரங்கள், மற்றும் கரையோர பின்னடைவு காப்பீடு போன்ற சுற்றுசூழல் பாதுகாப்பைப் பயன்படுததுவதற்கான பொருளாதார கருவிகளை உருவாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றது.

- சர்வதேச கடல் சட்டத்தினை பிரகடனப்படுத்துவதற்காக UN Convention on the low of the sea (UNCLOS) எனும் ஒப்பந்தங்களை முன்வைத்து பொருளாதாரத்தினை வளர்க்க முற்படுகின்றது.

- முதலில் மீன், மட்டி, கடல் ஆமை மற்றும் கடல் பாலூட்டி போன்ற ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதனை அங்கீகரித்து அவற்றின் கூட்டுறவு மற்றும் நிலையான நிர்வாகத்திற்கான கட்டமைப்பினை 61-73 வரையான பிரிவுகள் பேசுகின்றன. இவற்றில், Conservation and Exploitation, Straddling and Transboundary fish stocks, Marine mammals, See turtles (கடலாமை), Catadromous species, Marine habitat protection- UNCSOL போன்றவை இப்பிரிவில் குறிப்பிடப் படுகின்றது.

- "தூய்மை கடல்கள் திட்டம்" எனும் திட்டத்தில் புவி அறிவியல் அமைச்சகம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து விண்வெளியிலிருந்து கடலியலிற்கு தரவு மிதவைகளை ஏவுவது போன்ற புதிய திட்டங்களை தொடங்கி வானிலை போன்ற விஞ்ஞான பகுப்பாய்விற்கான பல்வேறு கடல்சார் தரவுகளை அனுப்ப செயற்கைகோள்களுக்கு உதவியுள்ளன.

- 2017 UN Ocean conference மாநாட்டில் பல அரசுகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள் போன்றோர் சதுப்புநிலங்களை பாதுகாப்பதன் மூலம் கடல் அமிலமயமாக்கத்தின் தாக்கங்களை குறைத்தல், பிளாஸ்டிக் பாவணையை குறைத்தல் உட்பட்ட 1400 ற்கு மேற்பட்ட செயற்திட்டங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு இதன் மூலம் கடல் வளங்களின் நிலைபேண் தன்மையினை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- வளர்முக நாடுகளில் மீன்வளம் குறைவடைவதை சமாளிக்க உதவ UN மற்றும் FAO உலகலாவிய மீன்வள மேலாண்மையை ஏற்படுத்துவதுடன் சட்டவிரோத மீன்பிடி முத்திரையை குத்தவும் மீன்பிடி வர்த்தகத்தினை ஊக்குவிக்கவும் பலவீனமான சுற்றுசூழல் இனங்களை பாதுகாக்கவும் உதவுகின்றது.

- காலநிலை மாற்றத்தை சமாளிக்க ஐக்கிய நாடுகள் சபையானது 39வது அமைப்புக்கள் கூட்டாண்மையை உருவாக்கி புதிய தொழிநுட்பம், ஆற்றல், புதுப்பிக்கதக்க ஆற்றல்கள் மற்றும் நிலையான போக்குவரத்து திட்டங்களுக்கு ஆண்டுக்கு சுமார் 500 டொலர் மில்லியன் ஒதுக்குகின்றது.

- சமூக நிகழ்வுகளை உருவாக்குவதன் மூலமும் ஐக்கிய நாடுகள் சபையானது உரையாடல் மற்றும் வாழிகாட்டுதலை வழங்கி நமது பெருங்கடல்களை காப்பாற்றுவதிலும் நமது எதிர்காலத்தை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகின்றது.

- 2030 Agenda for sustainable development and the future of global environmental governance என்ற UN ஆல் ஒழுங்குப்படுத்தபட்ட மாநாட்டில் United nation conference on sustainable development goal ஆன 14 வது இலக்கினை அடைவதற்கு life below water என்ற Sustainable of the ocean இணையே குறிக்கும் கருத்தானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு உதவியாக அமைவதாகவும் இப்பொருளாதாரத்தை மீன்பிடி, Aquaculture, Bioprospecting and biotechnology, Desalination (உப்புநீக்கம்), Maritime transport, ports, and related service shipping and shipbuilding, Coastal and maritime tourism, Waste disposal management போன்றவற்றுடன் நிலைபேண் அபிவிருத்தியுடன் தொடர்புபடுத்தி அவற்றின் உபநோக்கங்களான 14.1 - 14.10 வரையான இலக்குகளை அடைந்து கொள்வதவற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையானது பாரியளவு பங்களிப்பை வழங்குகின்றது.

- இது தவிர்ந்த Extractive industries, Renewable energy, Costal development போன்ற நீலப்பொருளதாரத்துடன் தொடர்புடைய பல விடயங்களை ஐக்கிய நாடு சபை பேசுவதன் காரணமாக நீலப்பொருளாதாரத்தை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நடைமுறைபடுத்துவதில் பெரிதும் பங்களிக்கின்றது.

## நீலப்பொருளாதாரம் பற்றிய இலங்கை தொடர்பானதொரு பார்வை

நீலப்பொருளாதாரம் என்பது கடல்களைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான ஒரு புதிய அணுகுமுறையாகும். இது பொருளாதார வளர்ச்சியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் இணைக்கும் ஒரு நிலைபேறான அணுகுமுறையாகும். அந்தவகையில், இலங்கையானது நீண்ட கடற்கரையோரம் கொண்ட நாடு என்பதால், நீலப்பொருளாதாரம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான துறையாகவும் மிகவும் பொருத்தமானதாகவும் கருதப்படுகின்றது. இதில் கடல்சார் உணவு, கடல்சார் உயிரி தொழில்நுட்பம், கடல்சார் சுற்றுலா, கடல்சார் போக்குவரத்து, கடல்சார் ஆற்றல், கடல்சார் கனிமங்கள் போன்ற பல்வேறு துறைகளில் இலங்கைக்கு மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

- கடல்சார் உணவு: இலங்கையில் மீன்பிடி தொழில் பழமையானது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பு செலுத்துகின்றது.

- கடல்சார் சுற்றுலா: இலங்கையின் அழகான கடற்கரைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. இதனால் நாட்டின் வருமானமானது அதிகரிக்கின்றது.

- கடல்சார் போக்குவரத்து: கொழும்பு துறைமுகம் தெற்காசியாவின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகும். இது சர்வதேச வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

### இலங்கையில் நீலப்பொருளாதாரத்தின் முக்கியத்துவங்கள்

- கடல்சார் உணவு ஏற்றுமதி, கடல்சார் சுற்றுலா வருவாய் போன்றவை நாட்டின் வருமானத்தை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றது.

- மீன்பிடி, கப்பல் கட்டுமானம், துறைமுக செயல்பாடுகள் போன்ற துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகுகின்றது.

- நீலப்பொருளாதார திட்டங்களை செயற்படுத்தும் போது அது வெளிநாட்டு நிறுவனங்கள் நாட்டிக்கு முதலீடு செய்ய ஊக்குவிக்கலாம்.

- நீலப்பொருளாதாரமானது கடல்சார் தொழில்நுட்பம், கடல்சார் ஆராய்ச்சி போன்ற துறைகளில் முதலீடு செய்வதன் மூலம் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் தூ ண்டுகின்றது.



CamScanner

இவ்வாறான நீலப்பொருளாதாரத்தினை இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செயற்படுத்துவதில் உள்ள சவால்களாக, இலங்கை போன்ற நாடுகளில் கடல்சார் துறையில் தெளிவான, நிலையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் இல்லாமை, நவீன கடல்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களின் குறைவான இருப்பு, அதிகப்படியான மீன்பிடி, கடல் மாசுபாடு போன்றன கடல் வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதன் மூலம் கடலில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் கடல்சார் துறைக்கு தேவையான திறன் கொண்ட பணியாளர்கள் பற்றாக்குறைகள் போன்றவற்றை சுட்டிக் காட்டலாம்.

**இலங்கையில் நீலப்பொருளாதாரத்தை செயற்படுத்தவதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு**

- தொழில்நுட்ப ஆதரவு: UN, இலங்கைக்கு கடல்சார் தொழில்நுட்பம், கடல்சார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. இதன் மூலம், இலங்கை தனது கடல்சார் வளங்களை மேலும் திறமையாக பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றது. உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகள் நிறுவகம் (LKI) vன்பன இலங்கையின் நீலப்பொருளாதாரத்திற்கான வரைபடத்தை உருவாக்குகின்றது. அத்தோடு, கடல்வாழ் உயிரினங்களிலிருந்து மருந்துகள், உணவு, எரிபொருள் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் கடல்சார் உயிரி தொழில்நுட்பங்களுக்கான உதவிகளையும் வழங்க முயற்சிக்கின்றமை.

- கொள்கை ஆலோசனை: கடல்சார் துறையில் சிறந்த கொள்கைகளை உருவாக்குவதற்கு UN ஆனது இலங்கைக்கு ஆலோசனை வழங்குகின்றதனால் நீலப்பொருளாதாரத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு வலுவான அடித்தளத்தை அமைக்க உதவுகின்றது. உதாரணமாக, (UNDP) மற்றும் (LKI) என்பன கடல் இடஞ்சார்ந்த திட்டம் (MSP) மற்றும் ஒருங்கிணைந்த தேசிய நிதியமைப்புக் கட்டமைப்பை (INFF) பூர்த்தி செய்யும் நீலப்பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பு போன்ற திட்டங்களை இலங்கைக்கு வழங்குகின்றமை. அதேபோல், இலங்கையின் கடல் பிரதேசத்தின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நோக்கங்கள் இரண்டையும் சமநிலைப்படுத்துவதற்கான வழிகாட்டும் கொள்கைகளை அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறைக்கு இடையில் ஒருங்கிணைக்கப்பட்ட, அணுகுமுறைக்கான பரந்த ஆளுகை கட்டமைப்பையும் வழங்குகின்றது.

- சர்வதேச ஒத்துழைப்பு: UN, இலங்கையை பிற நாடுகளுடன் இணைந்து கடல்சார் துறையில் ஒத்துழைக்க ஊக்குவிக்கின்றது. இது, அறிவு பகிர்வு மற்றும் சிறந்த நடைமுறைகளை கற்றுக்கொள்வதற்கு உதவுகின்றது. உதாரணமாக, நீலப்பொருளாதாரம் தொடர்பான UNDP மற்றும் LKI இன் ஒத்துழைப்பு மூலம் பொது, தனியார் மற்றும் மூன்றாம் துறைகளைச் சேர்ந்த பலதரப்பட்ட பங்குதாரர்களை ஒன்றிணைத்து, இலங்கைக்கான நீலப்பொருளாதார உத்திகளை ஏற்படுத்துகின்றமையைக் குறிப்பிட்டலாம்.



CamScanner

- நிதி உதவி: UN மற்றும் அதன் சார்பான நிறுவனங்கள், இலங்கையின் நீலப்பொருளாதார திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்குகின்றன. இது, திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிதியை உறுதி செய்கின்றது. எடுத்துக் காட்டாக, UN ஆனது நீலப்பொருளாதாரத்தின் அடித்தளத்தை நிறுவுவதற்காக கடல் சார்ந்த துறைகளின் வருவாய் உருவாக்கும் மற்றும் வருவாய் அல்லாத பலன்கள், நீலப் பெருக்கி விளைவு, மற்றும் நீலப்பொருளாதார மாதிரியானது நுகர்வுக்கும் பாதுகாப்பிற்கும் இடையே சமநிலையை எவ்வாறு பணமாக்க முடியும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

- திறன் மேம்பாடு: கடல்சார் துறையில் பணியாற்றுபவர்களுக்கு தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கு UN பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துகின்றது. இது, கடல்சார் துறையில் திறமையான மனித வளத்தை உருவாக்க உதவுவதோடு கடல் மாசுபாட்டை குறைத்தல், கடல்வாழ் உயிரினங்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நீலப்பொருளாதாரத்தை நிலைபேறான முறையில் மேம்படுத்துவதற்கான வழிகளையும் ஊக்குவிக்கின்றது (Kumara, 2019; Lanka, Sri Lanka's Blue Economy Sailing around, 2023).

எனவே, இவற்றிலிருந்து கடல் வளங்களை பாதுகாத்து, நிலையான முறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் போன்ற நிலைபேறான கடல் மேலாண்மையினைச் செயல்படுத்தல், கடல்சார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, கடல்சார் தொழில்நுட்ப கல்வி போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்தல், கடல்சார் துறையில் புதிய தொழில் முனைவோரை உருவாக்க ஊக்குவித்தல் மற்றும் பிற நாடுகளுடன் இணைந்து கடல்சார் துறையில் ஒத்துழைப்பு மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை கடைபிடிப்பதன் மூலம் இலங்கையில் நீலப்பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.





CamScanner

**அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பு**

| அபிவிருத்தி அடைந்த நாடுகள் | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் |
|---|---|
| கடல் பாதுகாப்பு, நிலையான பொருளாதாரம் தொடர்பான சட்டங்கள் மற்றும் மாநாடுகளினூடாக ஒப்பந்தங்களில் பங்களித்தல். உதாரணம்: ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள். | fடல் பாதுகாப்பு, நிலையான பொருளாதாரம் தொடர்பான சட்டம் மற்றும் மாநாடுகளினூடாக பிரசாரங்களுக்கு பங்களித்தல். உதாரணம்: "Srilanka next" பிரச்சாரம். |
| தொழிநுட்ப ரீதியான உபகரணங்களை வழங்குவதில் குறைந்தளவு பங்களிப்பு செலுத்துதல். | தொழிநுட்ப உபகரணங்களை வழங்குவதில் அதிகளவில் பங்களிப்பு செய்தல். உதாரணம்: பங்களாதேஸ், இந்தியா |
| குறைந்தளவு மூலதன உதவிகளை செய்தல். உதாரணம்: நீலப்பொருளாதாரத்திற்கான கரீபியன்தீவுக்கு UNDP உதவியமை. | நாட்டின் பொருளாதார நிலைமைகேற்ப அதிகமாக மூலதன உதவிகளை செய்தல். உதாரணம்: இலங்கையின் கடல் சுற்றுலாத் துறை நிதி. |
| நீலப்பொருளாதாரத்திற்கான கடின உழைப்புத் தொழிலாளர்களின் பற்றாகுறையை தீர்க்க வளர்முக நாடுகளிலிருந்து பெற்றுதர முயற்சி செய்தல். | கடின உழைப்பு தொழிலாளர்களை வழங்குவதை விட தொழிநுட்ப ரீதியாக பயிற்சிப்பெற்ற தொழில் வல்லுனர்களை வழங்க முயற்சி செய்தல். |
| கடல்பொருளாதாரம் தொடர்பான விழிப்புணர்வை குறித்த காலத்தில் சிறப்பாக ஒழுங்குப்படுத்தல். | கடல்பொருளாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல். |

**அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற தடைகள்**

- அதீத மீன்பிடிப்பு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் தடையை ஏற்படுத்துகின்றது.
- சட்டரீதியற்ற மீன்பிடி: வருடத்திற்கு 10 - 22 billian அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த 11-26 millian ton சட்டரீதியற்ற மீன்பிடியின் மூலம் பொருளாதார வளர்ச்சி கேள்விக்குரியாகின்றது.
- காலநிலை மாற்றமும் அதனுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளும்: இது சமுத்திர கட்டமைப்பில் நிலையற்ற தன்மையினை ஏற்படுத்துவதுடன் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களினை பாதிப்பதுடன் கடல் வெப்பநிலையிலும் தாக்கம் செலுத்துகின்றது.



CamScanner

- **நியாயமற்ற வர்த்தகம்:** பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கடல் வளங்களை சுரண்டபடுவதனை தடுக்காமல் வெறுமனே சர்வதேச ரீதியில் மீன்பிடி சமூகங்களாகவே கருதப்படுகின்றன.

- **அறிவார்ந்த அபிவிருத்தி திட்டங்கள் இன்மை:** முறையாக திட்டமிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தபடாத அபிவிருத்தி திட்டங்கள் காணப்படுவதானால் எதிர்பார்க்கப்படும் நீலப்பொருளாதாரத்திற்கான வினைத்திறனான விளைவுகளை பெறமுடியாதுள்ளது.

- நீலப்பொருளாதாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திடமற்ற பொருளாதார பின்னணி, அரசியல் சீர்த்திருத்தங்கள், சமூக சூழ்நிலைகள் மற்றும் உறுதியற்ற தொழிநுட்பம் என்பனவும் பாரிய தடைகளாக உள்ளன.

**அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் நீலப்பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற தடைகளுக்கான தீர்வுகள்**

- கடல்வளங்களினை துல்லியமாக மதிப்பிடல்.
- வளர்ந்த நாடுகள், வளர்முக நாடுகளுக்கு தொழிநுட்ப ரீதியாகவும் மூலதன வடிவிலும் நிதி உதவி:. நிதிக்கட்டமைப்புக்களை பல அரசு மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்களிடையே இணைந்து உருவாக்குதல்.
- கடலோர மேலாண்மை: மேப்பிங், வரையறுத்தல் மூலம் கரையோர வளங்களின் பாதுகாப்பை மேம்படுத்த அபாயக்கோடுகள் மற்றும் கடலோர வண்டல் செல்கள் போன்றவற்றை வரையறுத்தல்.
- நிலையான மீன்பிடி: அதிக மீன்பிடியால் மீனவர்களின் நீண்டகால வாழ்வாதாரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை தடுக்க முடியும்.
- கப்பல் போக்குவரத்திற்கு சுற்றுச்சூழல் சார் தொழிநுட்பங்களை பயன்படுத்தல்.
- கழிவுநீரினால் ஏற்படும் கடல் மாசுபாட்டை தடுக்க சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்தல்.
- கடலோர சுற்றுலாத்துறை விருத்திக்காக கடலோர உட்கட்டமைப்பை விருத்தி செய்தல்.

**முடிவுரை**

இன்று உலகளவில் கடல்சார் வளங்களை பாதுகாத்து, நிலையான பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்து கொள்வதற்காக நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட நீலப்பொருளாதாரமானது முக்கியத்துவம் பெற்ற கருப்பொருளாக உள்ளது. காலநிலை மாற்றத்திற்கு தீர்வாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுகோளாகவும் அமைவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நீலப்பொருளாதாரம் சார் செயற்பாடுகளுக்கு பாரிய பங்களிப்பு செய்து வருகின்றது. எனினும் பல மானிட மற்றும் பௌதீக காரணிகள் காரணமாக நீலப்பொருளாதார முறையை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையின் அடிப்படையில் எதிர்கால தன்மையை கருத்திற் கொண்டு காலத்தின் தேவைகளுக்கேற்ப சிறந்த தீர்வுகளை முன்வைத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் கடல் சூழலை பாதுகாப்பது இன்றியமையாததாகும்.



CamScanner